மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சென்ற நிதி நிலை அறிக்கையில் சில பேரூராட்சிகள், நகராட்சிகளாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது வரையில் அந்த அறிவிப்பு அமல் படுத்தப்படவில்லை. இளையான்குடி, கீழக்கரை போன்ற பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தற்பொழுது அரியலூர், கள்ளக்குறிச்சி, திருக்கோயில், பெருந்துரை ஆகியவைகள் நகராட்சியாக அறிவிக்கப்படும் தருவாயில் இருக்கின்றன. மற்றவைகளைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் விளக்கம் சொல்லப்படும்.

தெள்ளார் ஒன்றியம்.

*வினா எண். 132—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் தெள்ளார் பஞ்சாயத்து யூனியனை தெள்ளார், தேசூர் என இரண்டாகப் பிரிக்கக்கோரி அப் பகுதி பொதுமக்களிடத்திலிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சித் தேர்தலுக்கு முன் இவ்விதமான ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கும் செயற் குறிப்பை அரசு பரிசீலிக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியம் பெரியதாக இருப்பதால் நிர்வாகம் சிறப்பாக நடைபெற முடியவில்லை என்பதால் இந்தக் கோரிக்கை மூன்றாண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது. இந்தக் கோரிக்கையைப் பொதுமக்கள் வலியுறுத்துகிறார்கள். எனவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தேர்தல் முடிந்த பிறகு இவைகளை எல்லாம் அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பெண்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு, அரிசன மக்களுக்கு எத்தனை சதவீதம் இந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு இடம் அளிப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பிற்பட்டோருக்கு 45 சதவீதம், பெண்களுக்கு 35 சதவீதம், தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்க அரசு கருதுகிறது. சட்ட முன் வடிவு சட்டமன்றத்தின் ஆய்வுக்கு வரும்பொழுது உறுப்பினர்கள் கூறும் கருத்துக்களையும் பரிசீலித்த பிறகு சட்டமாக ஆக்கப்பட இருக்கிறது.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிகப் பெரிய ஒன்றியமாகக் கருதப்படும் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தகுந்த நேரத்தில் பிறகு யோசிக்கப்பெறும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் சமீபத்திலே தேர்தல் நடப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது வாக்காளர்கள் பட்டியலைத் திருத்துவதிலே சில குறிப்பிட்ட அளவு பெண்கள், அரிசனங்கள் போன்றவர்களுக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் செய்து முடித்து, இந்த ஸ்தல ஸ்தாபன தேர்தல்களை எந்த மாதத்தில் நடத்தப் போகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஏற்கனவே ஏப்ரல் இறுதியில் தேர்தல் நடத்தப்படும் என்கிற வகையில் நாம் பழைய முறையின் அடிப்படையில் நடத்தப்படலாம் என்ற வகையில் அறிவித்திருந்தோம். 18 வயதானவர்களையும் கூட வாக்காளர் பட்டியலிலே இடம்பெறச் செய்ய வேண்டும் என்று, ஏற்கனவே முதலமைச்சரவர்கள் அறிவித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டதன் அடிப்படையில் அவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குத் தேவைப்படக்கூடிய காலம் ஒரு

மாத காலம். ஆகவே, ஏப்ரலுக்குப் பிறகு, அறிவிக்கப்பட்ட தற்கு ஒரு மாத காலத்திற்குள் நிச்சயமாகத் தேர்தல்கள் நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 133 மற்றும் 134 ஆகியவை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

Construction of a jetty at Rameswaram – Dhanushkodi.

*Q. No. 135 Thiru R. E. CHANDRAN JAYAPAL: Will the Hon. Minister for Transport be pleased to state:

a) Whether the Government have any proposal for the construction of a permanent pier or a jetty at Rameswaram and Dhanushkodi for the berthing of the ferry steamer plying between India and Sri Lankha; and

b] If so; the details thereof.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, 1970-ல் இந்திய அரசு அமைத்த குழு ஒன்று கப்பல்கள் நங்கூரம் இறக்கி நிற்பதற்கு வசதியாக, அவை தாங்கிப் பாலம் ஒன்றைக் கட்டுவதற்கு இராமேசுவரம் மிகவும் பொருத்தமான இடம் எனப் பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, போக்குவரத்து நீராவிக் கப்பல்கள் நெடுகவும் நங்கூரம் இறக்கவும் அது தொடர்பான அனைத்துப் பணிகளை கவனிப்பதற்கும் இராமேசுவரத்தில் வலுவூட்டப்பெற்ற சிமிண்ட் கான்கிரீட் தோணித்துறை ஒன்றைக் கட்டுவதற்கு வகை செய்கின்ற செயல் திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறுவதற்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச் செயல் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ஒரு கோடியே 80 இலட்சமாகும். இத் திட்டத்திற்கான ஒப்புதல் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கூதக்குடி க. சண்முகம்: தலைவரவர்களே, 1970 லேயிருந்து இப்பொழுது பத்தாண்டுகள் ஆகின்றது. கடந்த கால அரசுகளைப் பற்றி, நிறைவேற்றுவதிலே தாமதம் இருந்தாலும், மத்திய அரசிடமிருந்து சீக்கிரமாக இதற்கான அனுமதியைப் பெற்று இந்த அரசு இதை உடனடியாக நிறைவேற்றுகின்ற முயற்சியில் ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பலமுறை மைய அரசுக்கு நாம் நினைவூட்டியதோடு அல்லாமல், மைய அமைச்சரைச் சந்தித்து இதுபற்றி நேரிலேயே நான் வலியுறுத்தியிருக்கிறேன். இது குறித்து நான் மைய அமைச்சரை மீண்டும் சந்தித்து வலியுறுத்தி விரைவில் இதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.